விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆடி 11 ஷவ்வால் 5 இதழ் 164

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை - 27—7—82

இரசாயனவியல் வகுப்புக்கள்

அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியரால்

83 Aug. வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

புதிய வகுப்புக்கள்:-

83 Aug:- 30-7-82 மாலை 4-30

84 Aug:- 2-8-82 காலை 8-30

ஆரம்பமாகின்றன.

151, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.

3967

## சேபாலாவை ஒப்படைக்கும்படி இத்தாலி வேண்டுகோள்

(கொழும்பு)

விமானக்கடத்தல் காரரான சேபால எக்கநாயக்காவை தங்களிடம் ஒப்படைக்குமாறு இத்தாலிய அரசு உத்தியோக பூர்வமாக வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தாலிய தூதரகம் இது தொடர்பான பத்திரங்களை நேற்று வெளிவிவகார அமைச்சிடம் ஒப்படைத்தது. [க]

# தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசியல் அதிகார சபை!

## எகிப்திய அதிபர் யோசனை

லண்டன், ஜூன். 25

இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஒன்றையொன்று பரஸ்பரம் அங்கீகரிக்க இணங்க வேண்டும் என எகிப்திய அதிபர் தெரிவித்துள்ளார். [க]

## சாவகச்சேரி 'நவம்' தீர்மானம் பொதுச்சபைக்கு வரும்

(ஏ. வி. மாணிக்கம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அரசியல் அதிகார சபை ஒன்று (பொலிட் பீரோ) அமைக்க வேண்டுமென்ற கூட்டணிக் கிளையின் தீர்மானம் கூட்டணியின் பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.**

அரசியல் அதிகாரசபை அமைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை சாவகச்சேரி எம். பி திரு வி. என் நவரத்தினம் கொண்டுவந்துள்ளார்.

சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடந்த சாவகச்சேரி தொகுதி கூட்டணி பொதுச்சபைக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவரும், நல்லூர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. கூட்டணிபொதுச் சபைக்கு இத்தீர்மானத்தைச் சமர்ப்பிக்கஐந்துபேர்கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தின் மீது திரு நவரத்தினம் அக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:

''தமிழர்விடுதலைக்கூட்டணி தலைவர்களான திரு. எம். சிவசிதம்பரம், எதிர்க்கட்சிமுதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரிடமுள்ள நேர்மையையோ, அரசியல்தூய்மையையோ, சாணக்கியத்தையோ கொண்ட தலைவர்களை எதிர்காலத்தில் இனம் கண்டுபிடிக்க முடியாது. அதேநேரத்தில் குறிப்பிட்ட தலைவர்கள்மேலே கூட களங்கம் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிமேல் மக்கள் வைத்திருக்கும்நம்பிக்கையைமேலும் வளர்க்கவும், கட்சியை வளர்க்கவும் விடுதலைப்பயணத்தை முன்னெடுத்துச் செல்லவும், 7 அல்லது 9 பேர்கொண்ட அதிகா சபை பொலிட்பீரோ) அமைப்பது மிகவும் இன்றிய

(8-ம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் நாடகத் தந்தை கலையரசு காலமானார்!

(யாழ்ப்பாணம்)

ஈழத்து தமிழ்நாடகத்தின் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் தமது 94 வது வயதில் நவாலியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று அதிகாலையில் காலமானார்.

தமிழகத்து தமிழ் நாடக பிதாவான திரு பம்மல் சந்பந்த முதலியாரின் சீடரான கலையரசு சொர்ணலிங்கம் தமது 12வது வயதில் 1901ல் முதன் முதலாக அரிச்சந்திரன் நாடகத்தில் லோகிதாஸனாக நடித்தார். 1981-ம் ஆண்டு வரை தொடர்ந்து மேடையில் நடித்தார்.

கூனி, ஷைலாக், நந்தன், மனோகர் ஆகிய பாத்திரங்கள் கலையரசுக்குப் பெருமை தேடிக்கொடுத்த பாத்திரங்கள். 1953ல் ஈழத்து தமிழ் நாடக ரசிகர்களாலும் கலைஞர்களாலும் 'கலையரசு' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சாயிபாபாவுக்கு கொழும்பு மாநகரசபைபொதுவரவேற்பு

[கொழும்பு]

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அழைப்பின்பேரில்இங்குவரும்பகவான் சத்திய சாயிபாபாவிற்குப் பொது வரவேற்பு அளிப்பது என நேற்று கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

இத்தீர்மானத்தை, நேற்று நடந்த கொழும்பு மாநகர சபைக் கூட்டத்தில், உறுப்பினரான திரு. எம். மகேந்திரராஜா முன்மொழிந்தார்.

இலங்கை வரும் பகவான் சாயிபாபா, இங்கு அரசினர் விருந்தினராக தங்கியிருப்பார்.

பகவான் சாயிபாபாவிற்கு மற்றும் இடங்களிலும் வரவேற்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. [க]

## புதிய தொழிற்சங்கம் உதயம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட விசேட சேவை உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஒன்று உதயமாகிறது.

கோப்பாய் எம். பி. யும் மொழிவழித் தொழிற்சங்கத் தலைவருமான திரு. மு, ஆலாலசுந்தரம் தலைமையில் இத்தொழிற்சங்கத்தின் அங்குரார்பணக் கூட்டம் யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இத்தொழிற்சங்கத்தை திருகோணமலை, மட்டக்களப்பு,

[8-ம் பக்கம் பார்க்க]

## ஜனசக்தி பாண்டியன் யாழ். வருகிறார்

[யாழ்ப்பாணம்]

தமிழக அரசு பாரதி நூற்றாண்டுக்குழு உறுப்பினரும் 'ஜனசக்தி' ஆசிரியருமான திரு. தா பாண்டியன் யாழ்ப்

(2-ம பக்கம் பார்க்க)

## சோவியத் பதக்கம் பெற்ற இலங்கைப் பிரமுகர்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை-சோவியத் நட்புறவுச் சங்கத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கையர்களுக்கு நட்புறவுப் பதக்கங்கள் இலங்கை சோவியத் நட்புறவுச்சங்கத்தால் வழங்கப்பட்டது. பதக்கம்பெற்றவர்களில் மானிப்பாய் எம். பி திரு. வி. தருமலிங்கமும் ஒருவராவர்.

மூவரடங்கிய சோவியத் தூதர்குழுவிற்கு தலைமைவகித்து இலங்கை வந்திருந்த சோவியத்தின் அதிகாரம் மிக்க உயர்பீடத்தின் உறுப்பினரும் நட்புறவு கலாசாரத் தொடர்புகள் சங்கத் தலைவருமான குளலோசோவ் அம்மையாரால் மேற்படி நட்புறவுப் பதக்கங்கள் அணிவிக்கப்பட்டன. முன்னாள் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா, சேர் ராசிக்பரீத் திருமதி விவியன் குணவர்த்தன, முன்னாள் நீதியரசர் ஜயாபத்திரான சட்டத்தரணி திரு. எஸ். நடேசன் கியூ. சி ஆகியோருக்கும் இப் பதக்கங்கள் வழங்கப்பட்டது.

மூவரடங்கிய சோவியத் தூதுக்குவில் குறேசோவ் அம்மையார், இலங்கைக்கான சோவியத்தின் முதல் தூதுவர் திரு. வீ. ஜி. யக்கோலோங், சோவியத் யூனியனின் ஆசிய தெற்காசிய பிரிவின் தலைவரான திரு. ஏ. எஸ். டிபகோப் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். [சி]

## வான் மீது குண்டுவீச்சு 10பேர் கைது!

(மன்னர்)

மன்னாரிலிருந்து பேசாலை நோக்கி சென்ற வானுக்கு குண்டுவீசி சேதப்படுத்தியது தொடர்பாக தாழ்வுபாட்டைச் சேர்ந்த 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு இம்மாதம் 30ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பேசாலை கிராமோதய சபை

[8ம் பக்கம் பார்க்க]

## ரூபா 5 லட்சம் பெறுமதியுள்ள சுருச்செட்டை சிங்கப்பூருக்கு ஏற்றுமதிசெய்ய ஏற்பாடு!

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டைத்தொகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சுருச்செட்டைகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இந்தச் சுருச் செட்டைகள் சூப் தயாரிப்பதற்காகச் சிங்கப்பூரில் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சங்கம் விரைவில்மேலும் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான சுருச்செட்டைகளை சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சங்கத்தின் ஏற்றுமதிக்குப் பொறுப்பான கணக்காளர் திரு. ஏ. பி. ஜோர்ஜ் இது பற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார். (க)

## முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் மனு: மூன்று பிரதிவாதிகளையும் கோர்ட்டில் ஆஜராகப் பணிப்பு

[கொழும்பு]

முன்னாள் அமைச்சர்பிலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா உயர் நீதிமன்றத்தில்தாக்கல் செய்த வழக்கில் 3 பிரதிவாதிகளையும் ஆகஸ்ட் 13ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் பணித்துள்ளார்.

விசேட ஆணைக்குழுவிலுள்ள ஒருவர் தகுதியற்றவர் என்று பிரகடனம் செய்யுமாறுகோரி திரு, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இம்மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## பயிற்சி

றேடியோ–டெலிவிசன், ஏயர்சொண்டிசனிங், வெல்டிங், Hotel Management, மூன்று மாத டிப்பிளோமா பயிற்சி வகுப்புக்கள் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பம் 30-07-82. அனைவரும் சேரலாம். நேரில் வரவும். நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
3970

## தேவை

உலோகத் தகட்டு வேலையில் அனுபவமுள்ளவர்கள் உடனே தேவை. இரும்பு அலுமாரிகள், கபினெற்றுகள் செய்வதில் அனுபவமுள்ளோர் விரும்பப்படுவர். ஏற்ற சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்குக. விளம்பர இல. 3979, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (3979

பிளாஸ்ரிக்கினுல் கதிரை பின்னக்கூடியவர்கள் தேவை. நல்ல வருமானமும் தொடர்ச்சியான வேலையும் உண்டு. உடனே விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 3980, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(3980)

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத புனரமைக்கப்பெற்ற Isuzu–ELF150 15 சீற் கைறூவ் 1979 மொடல் வானும் C/90 ஹொண்டா மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3930

### மானிப்பாய் கோவில்பற்று ப. நோ். கூ. சங்கம்

## கேள்வி மூலம் விற்பனை

மேற்படி சங்கத்தில் பின்வரும் பொருட்கள் கேள்வி மூலம் விற்பனைக்குண்டு.

1. வெற்றுச்சாக்கு 2800
2. பாவித்த லொறி ரயர்
3. வெற்றுப் பரல் [45 கலன்]
4. பாவித்த பற்றி [லொறி]
5. பழைய ரிம் [லொறி]
6. றூளிங் மெசின்
7. சிலின்டர் மெசின்

சாக்கு விற்பனைக்கான கேள்விப்பத்திரத்தை மட்டும் ரூபா 200/- முற்பணம் செலுத்தி கேள்விப்பத்திரத்தை வாங்கி பூரணப்படுத்தி ஒப்படைக்க வேண்டும். மற்றைய பொருட்கள் விற்பனையைப் பொறுத்தளவில் பொருட்களை நேரில் பார்வையிட்டு கேள்விப்பத்திரம் தயாரித்து பதிவுத்தபாலில் 2-8-82-ந் திகதி 12.00 மணிக்குள் கிடைக்கக்கூடியதாக பொதுமுகாமையாளர், மானிப்பாய் கோவில்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

பொது முகாமையாள
[3998]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வகுப்புகள்

G.C.E [A/L] 1983/1984 கலை, வர்த்தக இரண்டாவது பிரிவு புதிய வகுப்புகள் ஆரம்பம்: 01-08-82. பொருளியல்–குமாரவேல், கணக்கியல் – மரியதாஸ், அளவையியல்–நவரட்ணம், வர்த்தகம் – திலசரட்ணம், தமிழ் – மீரா, புவியியல் – சண், இந்துநாகரீகம்–அருள்நங்கை, அரசியல் – தர்மலிங்கம். J.E.C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (யாழ் புகையிரதக் கடவைக்கு அருகில்) மாணவர்களுக்கு பல சலுகைகள் உண்டு.
3993

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல. 84அ–பிரிவுகள் 524,532]

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்றபரமேஸ்வரி சண்முகலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில், பரமேஸ்வரி சண்முகலிங்கம்

மரணமெய்தியவர்
தாமோதரம்பிள்ளை சண்முகலிங்கம் – இமையாணன், உடுப்பிட்டி.
மனுதார்.

மரணசாதன ]
நியாயாதிக்கம்] இல. 1138T

1. செல்வி சியாமளா சண்முகலிங்கம்
பராயமற்றவர்
2. உதயசங்கர் சண்முகலிங்கம் –பராயமற்றவர்
இமையாணன், உடுப்பிட்டி.
3. தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்
–இயற்றுலை வரணி.
–பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ம் ஆம்ஆண்டு ஆனி மாதம் 25ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதி மன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
கே. செல்வராஜா,
பதிவாளர்.

வரைவு
பொ. குமாரசாமி,
மனுதார் சட்டத்தரணி.

1982 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
15–7–82

காரணம் காட்டும் தவணை 30–7–82க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கே. செல்வராஜா,
பதிவாளர்.
3954

## பருத்தித்துறை பிரதேச.சபைத் தலைவர் தெரிவு

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்பிரிவு பிரதேசசபைத் தலைவர் தெரிவு இம்மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

## முல்லைத்தீவு - வவனியா உதைபந்தாட்ட பயிற்சிமுகாம்

முல்லைத்தீவு – வவனியா மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட வீரர்களுக்கானஉதைபந்தாட்டப் பயிற்சி முகாம் வகுப்பு நேற்று முன்தினம் வவனியா நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

இதற்கான ஏற்பாட்டினை வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. பி. சிறிசேனு தலைமையிலான குழுவின் அனுசரணையுடன் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளரும், சர்வதேச உதைபந்தாட்டமத்தியஸ்தருமான திரு. ஏ. எஸ். குணரத்தினம் மேற்கொண்டு வருகின்ருர்,

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடனும், ஜெர்மன் அரசாங்கத்தின் உதவியுடனும் நடைபெறவுள்ள இப்பயிற்சி முகாமில் மத்தியஸ்தம் வகித்தல், விளையாட்டு நிர்வாகம், மருத்துவம் நிர்வாகம் போன்றவற்றுக்கான விரிவுரைகளும் நடைபெறவுள்ளன. இது போன்ற வகுப்புக்கள் கடந்த வருடமும் வவனியாவில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மத்தியஸ்தம் வகிப்பது சம்மந்தமான விரிவுரைகளை இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தின் உப தலைவர் திரு. ரீ. சுப்பிரமணியம், காப்டன் மென்டிஸ், காப்டன் சோமசுந்தரம் ஆகியோரும் விளையாட்டு நிர்வாத்தினை வவனியா மாவட்ட விளையாட்டதிகாரி திரு.ரி.நடராசா, முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு.கே.ஏகாம்பரம் ஆகியோர் நடாத்துவார்கள். வவனியா தமிழ்ப்பிரிவு உதவிஅரசாங்க அதிபர் ஏ. சி. குணநாயகம், வவனியா சிங்களப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ.றெபேர்ட் ஆகியோர் நிர்வாக விரிவுரைகளையும், வவனியா மாவட்ட அதிகாரி டாக்டர் எஸ். நிரஞ்சன் தலைமையில் டாக்டர் சிறீராஜேஸ்வரன், டாக்டர் ஏ. ஞானேஸ்வரன், டாக்டர் எஸ். இராசதுரை ஆகியோர் வைத்திய விரிவுரைகளையும் வழங்குவர். பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்ச்சியில் வவனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லொகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வவுனியா நகரசபை முதல்வர் திரு. ஏ. கேதீஸ்வரன், வவுனியா தளபதி கேணல் ரி. ஆர். ரி. ஜெயதுங்கா. வவுனியா பொலிஸ் அதிபர் திரு. சி. பி. ஜெயசூரியா, வவனியா கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். பி. சிவபாதம், சிங்கள மகாவித்தியாலய அதிபர் திரு. எல். பக்கிரிசாமி, யாழ். திசா மகாவித்தியாலய அதிபர் திரு மு. ஜெகதீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர்.

வவனியா முல்லைத்தீவு உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கிடையிலான சிநேக பூர்வமான போட்டியும் இறுதியாக நடைபெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்டப் பயிற்சியாளர் திரு. எஸ்.அண்ணுதுரை மேற்கொண்டுள்ளார்.

[நயினை. நிரு]

## ஈட்டு விற்பனவு விளம்பரம்
### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல: ஈடு/249

ஈடு/249 இலக்க வழக்கில் வாதிகள் யாழ்ப்பாணம் 84/1 அரசடி வீதி சுப்பையா இரட்ணம், பெண் நாகம்மா ஆகிய இவர்கள் காலஞ்சென்ற வயித்திலிங்கம் பாஸ்கரன் பெண் திரிபுரசுந்தரியின் மரணச்சொத்து நம்பிக்கைப் பொறுப்பாளர் யாழ்ப்பாணம்வழக்கின்மூலம்நிர்வாகத்தத்துவகாரராகியஇவர்களுக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை ரூபா. 36,802.40 சதமும் வழக்குச் செலவு ரூ. 810/37 சதமும்விற்பனவுச்சலார்களும்இதில்கொடுபட்ட 10,000/– ரூபா கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதி சரவணை தற்போது 174, நாலாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11 தம்பு தில்லையம்பலம் கைம்பெண் சரஸ்வதியிடம் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் 1982ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18 உ (18–8–1982) புதன்கிழமை முற்பகல் 10–00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை "கேணிக்கரைக் கலடு" உறுதிப்படி நெ. பர. 16 குளி 9½ ஆனல் அளந்து கண்டபடி நெ. பர. 17 குளி 9,' கிணற்றில் அரைவாசியும், எல்லை கிழக்கு குளம், வடக்கு வைரவசுவாமி கோவிலுக்கும், விசுவர் பொன்னுத்துரைக்குமுரியஆதனங்கள் மேற்கு றேட்டு, தெற்கு றேட்டும், பதஞ்சலி சதாசிவத்துக்குமுரிய ஆதனம். இதடங்கலும் யாழ்ப்பாணம் பதிவு சி. 400/48.

வ. சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்

553 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 3994

## சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்
### துறைமுகம்- காரைநகர்

# ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்கள் 31-7–82 காலை 9–00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனைசெய்யப்படும்.

இப்பொருட்களைப் பெற விரும்புவோர் 23–7–82 க்கு மேல் நேரடியாகப் பார்வையிடலாம். பொருட்களின் விபரங்களை உற்பத்தி முகாமையாளரின் பணியகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விற்பனையில் பெறப்பட்ட பொருட்கள் யாவற்றிற்கும் முழுத்தொகையையும் செலுத்துவதோடு, அன்றைய தினமே பி. ப. 4–00 மணிக்கு முன் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்நிபந்தனைகளுக்கமைய விற்பனவு மூலம் பொருட்களை பெற்றபின் எந்தவித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏல விற்பனை மூலம் பொருட்களைப் பெற்றவர் அன்றைய தினமே பொருட்களை எடுத்துச் செல்லாதுவிடின், மீண்டும் விற்பனை செய்யப்படுவதோடு அப்பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

### பொருட்கள்

(1) மரம் அரியும் இயந்திரம்(பாட்டுவாள்)
(2) இன்சுலேட்டட் பெட்டி (5 தொன்)
(3) சீமெந்து கலவை இயந்திரம்
(4) இரும்புப்பட்டடை மேசை
(5) காற்று அமுக்கி
(6) டீசல் என்ஜின் (ஜி. எம்.)
(7) FORD டீசல் என்ஜின்
(8) றெனேல்ட் மோட்டார் வாகனம் 01 (பச்சை)
(9) இரும்பு தாங்கி-1000 கலன்
(10) இரும்பு தாங்கி-2500/4000 கலன்
(11) 28' படகு அச்சு
(12) வலை இழுப்பு இயந்திரம்
(13) இரும்பு அரியும் இயந்திரம்
(14) குறுக்குவெட்டு அரியும் மர இயந்திரம்
(15) தண்ணீர் பம்ப்-3"
(16) கழிவு இரும்புத்துண்டுகள்

வர்த்தக அதிகாரி

3924

## ஆண்டுவிழாப் போட்டி முடிவுகள்

[புலோலி]

தென்புலோலி அறிவகம்சனசமூக நிலையத்தின் 27 வது ஆண்டு விழாவை யொட்டி நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியை கிராம சேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம், திரு.கே.வி.செல்வராஜன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர் போட்டி முடிவுகள் பின்வருமாறு;– 30 மைல் சைக்கிளோட்டப் போட்டி 1–ம் இடம் வி.செல்லக்கண்டு, 2–ம் இடம் வி.நகுலேஸ்வரன், 3–ம் இடம் எஸ். சந்திரசேகரம். பெண்களுக்கான 7மைல் சைக்கிளோட்டப் போட்டி; 1–ம் இடம் செல்வி வி.சுகுணு, 2–ம் இடம் செல்வி ஈ. ஈ. ஜோன்ஸ், 3–ம் இடம் செல்வி வி. சுலோசன 5மைல் மரதனேட்டப் போட்டி 1ம் இடம் ஆர்.தியாகராசா, 2ம் இடம் ஈ. தங்கவடிவேல் 3ம்இடம் வி.செல்வராசா இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் வள்ளுவன் இல்லம் முதலாமிடத்தைப் பெற்றது.

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை விழாவிலே பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட வைத்திய கலாநிதி ஏ.சிவபாதசுந்தரம் வழங்கினுர்.

### ஸிம்பாப்வேயில் அரசியல் வன்செயல்கள்

# விமானத்தளத்தில் தரித்துநின்ற 12 விமானங்கள் நாசம்!

## என்கோமா ஆதரவாளர்கள் அட்டகாசம்

சாலிஸ்பரி, ஜூலை 26

ஸிம்பாவேயில் உள்ள விமானப்படைத்தளம் ஒன்றில் நிறுத்தப்பட்டிருந்த பன்னிரண்டு விமானங்கள் சதிகாரக் கும்பலினால் நாசமாக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது

ஸிம்பாப்வே அரசாங்கத்துக்கும் பாதுகாப்புப்படைகளுக்கும் அச்சுறுத்தலாக இடம்பெறும் இதுபோன்ற பல சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெற ஆரம்பித்துள்ளன.

நேற்றுமுன்தினம் 'ஒவேரே' என்னும் இடத்தில் அமைந்துள்ள 'டோன்ஹில்' என்ற விமானப்படைத்தளத்தில் சதிகாரகும்பல்களால் நடத்தப்பட்ட தாக்குதலின்போது பன்னிரண்டு விமானப்படை விமானங்கள் அழிக்கப்பட்டன.

ஸிம்பாப்வே பிரதமரான திரு. றொபர்ட் முகாபேக்கு எதிரான சக்திகளே இத்தகைய வன்முறைச் சம்பவங்களில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஸிம்பாப்வேயிலிருந்த 6 வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் இரண்டு தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டனர். இரு அமெரிக்கர், இரு ஆஸ்திரேலியர், இரு பிரித்தானியர்கள் ஆகியோரே கடத்தப்பட்டவர்களாவர். இவர்களைக்கடத்தியகோஷ்டியினர் ஸிம்பாப்வேஅரசுசிறையில் வைதிருக்கும் தமது கூட்டத்தவரைவிடுதலைசெய்யவேண்டுமென்றும், இல்லையேல் இந்த உல்லாசப்பயணிகளைத் தாம் கொன்றுவிடுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு. முகாபே மீது அதிருப்திகொண்டிருக்கும் எதிரணியைச்சேர்ந்த அரசியல்பிரமுகரான திரு. என்கோமாவின் ஆதரவாளர்களே இக் குழப்பங்களில் பெருமளவு ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வன்முறைச்சம்பவங்கள் இவ்வாறு அதிகரித்துவருவதையிட்டு அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டுவருகின்றது.

'டோன்ஹில்' விமானத்தளத்தில் விமானங்கள் நாசமாக்கப்பட்டது குறித்தும் தீவிரவிசாரணைகள்மேற்கொள்ளப்படுகின்றன. [கி-இ]

## "இஸ்ரேலை பாலஸ்தீன தலைவர் அங்கீகரித்துவிட்டார்"

### அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களின் தகவலை இஸ்ரேல் மறுக்கிறது

### அரபாத் மௌனம்!

பெய்ரூட், ஜூலை 26

பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனப் யாசிர் அரபாத் இஸ்ரேலை அங்கீகரித்துள்ளதுடன், பாலஸ்தீனர்கள் குறித்த ஐ. நா.வின் தீர்மானத்திலும் கைச்சாத்திட்டுள்ளார் என்று அமெரிக்கக் காங்கிரஸைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது லெபனன் வந்திருக்கும் அமெரிக்கக் கோஷ்டியொன்றின் தலைவராக இருக்கும் கலிபோர்ணியா குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. போல் மக்கிளொஸ்கி என்பவரே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அமெரிக்கக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வேறொரு பிரதிநிதி ஐ. நா. தீர்மானத்தில் பாலஸ்தீனியர்களது உரிமைகள் குறித்து 242ம் பிரிவில் இருக்கும் விபரங்களை முழுதாக அறிந்துகொண்டபின்னரே ஜனப் அரபாத் இஸ்ரேலை அங்கீகரித்தும், பாலஸ்தீனியர்கள் குறித்த தீர்மானத்திலும் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

#### அரபாத் கருத்து வெளியிடவில்லை

ஆனால் பாலஸ்தீனியத் தலைவர் அரபாத் இதுகுறித்து எதுவித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இத்தகவல் தமது பிடியிலிருக்கும் 6000 பாலஸ்தீனியக் கொரில்லாக்களை விடுவிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பொய்ப்பிரசாரம் என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

#### இஸ்ரேல் குண்டுவீச்சு தொடர்கிறது

இதேவேளை இஸ்ரேலிய விமானங்களின் குண்டு வீச்சு தொடர்ந்தும் பெய்ரூட்டின் சுற்றுப்புறங்களில் நடைபெற்றுவருகின்றது. சந்தேகத்துக்கிடமானவர்கள் யாவரும் பலத்த சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர். ராட்சத டாங்கிகள் எந்நேரமும் ரோந்து சுற்றுதலில் ஈடுபட்டுள்ளன.

சில இடங்களில் போர் அதிகளுக்கு ஐ. நா. வாகனங்கள் கொண்டுசெல்லும் நிவாரணப் பொருட்களையும் இஸ்ரேலியப் படைகள் தடுத்து வைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (கி-இ)

## மத்தியகிழக்கு அமைதிக்கு எகிப்து உதவவேண்டும்

### இஸ்ரேலியப் பிரதமர் கோரிக்கை

டெல் அவிவ், ஜூலை 26

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த எகிப்து இஸ்ரேலுடன் தொடர்ந்தும் ஒத்துழைக்கவேண்டுமென்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. மெனச்சம் பெகின் எகிப்திய அதிபர் ஜனப் ஹொஸ்னி முபாரக்கை கேட்டுள்ளார்.

1952-ம் ஆண்டு எகிப்தில் தோன்றிய புதிய அரசியல் அமைப்பின் 30-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி எகிப்திய அரசுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியொன்றிலேயே திரு. பெகின் இவ்வாறு கேட்டுள்ளார்.

இதேவேளை லெபனனில் இஸ்ரேலிய ஊடுருவலுக்கு எகிப்திய வெளிநாட்டமைச்சர் தமது கண்டனத் தெரிவித்துள்ளதுடன், இதுவரை காலமும் நிலவிய எகிப்திய— இஸ்ரேல் நட்புறவுக்குப் பாதிப்பு ஏற்படலாமென்றும் எச்சரித்துள்ளார்.

எகிப்திய பாராளுமன்றத்தில் இஸ்ரேலிய ஊடுருவலுக்கு எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

கெய்ரோவிலிருக்கும் இஸ்ரேலியத் தூதரகத்தைமூடி அங்குள்ள தூதரையும் வெளியேற்றவேண்டுமென அவை அரசைக் கோரியுள்ளன. (கி)

## இன,மத ஒற்றுமை பேணப்படவேண்டும்

### இந்தியாவின்புதியஜனாதிபதிகூறுகிறார்

புதுடில்லி, ஜூலை 26

'சிறப்புமிக்க எனது முன்னோடிகளின் மரபுகளைப் பின்பற்றப்போகிறேன். தேசிய வாழ்வில் ஒழுங்கும் கட்டுப்பாடும் தேவை. ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுவேன்.'

இவ்வாறு இந்தியாவின் ஏழாவது ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்துகொண்ட திரு. ஸெயில் சிங் உரையாற்றுகையில் கூறினார்.

இவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'பல்வேறு இனங்களுக்கும், மதங்களுக்குமிடையில் ஒற்றுமைகாணவேண்டும். கடின உழைப்பையும், கடமைப்பற்றையும் நான் கடைப்பிடிக்கப் போகிறேன்.

சர்வதேச பிரச்னைகளுக்கு அமைதியானமுறையில் தீர்வு காணவேண்டும். யுத்தம்,வன்முறை, பயங்கரவாதத்தை ஒழிக்கவேண்டும்.

'ஜனாதிபதியின் கடமைகளை நிறைவேற்ற மக்கள் என்னுடன் ஒத்துழைக்கவேண்டும்' என்றார்.

ஜனாதிபதி திரு.ஸெயில் சிங்கிற்கு பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத், பங்களாதேஷ் இராணுவ நிர்வாகி, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு அதிபர் ஆகியோர் வாழ்த்துச்செய்திகளை அனுப்பிவைத்தனர். (வெ)

## 'நாகசாகி' மண்சரிவு : இறந்தோர் தொகை 200

### மீண்டும் பெருமழை அபாயம்

டோக்கியோ, ஜூலை 26

ஜப்பான் 'நாகசாகி' நகரில் ஏற்பட்டிருக்கும் மண்சரிவு, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றால் இறந்தவர்களின் தொகை 200ஆக அதிகரித்துள்ளது.

மண்ணில் புதையுண்டவர்களில் 196 பேர் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றனர். 185 பேரைக் காணவில்லையென அறிவிக்கப்பட்டிருப்பதுடன் இவர்கள் வெள்ளத்துடன் அடித்துச்செல்லப்பட்டிருப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. மீட்புவேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

ஜப்பானியப் பொலிஸார் இந்த இயற்கைஅழிவுகுறித்து கருத்து வெளியிடுகையில் 1947ல் அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சால் நாகசாகியில் பின்னர்ஏற்பட்ட உயிரிழப்புகளுக்குப்இதுவே அங்கு ஏற்பட்டுள்ளபெரும் உயிர்ச்சேதம் எனத்தெரிவித்தனர்.

இதேவேளையில் தென்ஜப்பானில் மீண்டும் பெருமழை பெய்யலாமென ஜப்பானிய வானொலி எச்சரித்துள்ளது. [கி-இ]

## வடஇந்தியாவில் வெள்ள பெருக்கு

புதுடில்லி ஜூலை 26

வட இந்தியாவின் பல பிரதான பகுதிகளில் பலத்த மழை காரணமாக பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. உத்தரப் பிரதேஷ், பீகார், ஹரியான ஆகிய பகுதிகளில் கிராமங்கள் சில வெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளன.

பிரம்மபுத்ரா நதி உட்பட சில கிளைநதிகளின் நீர்மட்டம் பெருகியுள்ளது. இதனால் இவற்றின் கரையோரப்பகுதிகளிலிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

வெள்ள மேற்பட்ட பகுதிகளின் மாவட்ட அதிகாரிகள் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிவைத்துவருவதுடன் அதிஅத்தியாவசிய பண்டங்களையும் பாதிக்கப்பட்டோருக்கு அனுப்பிவைத்துள்ளனர். (கி)

## இலவச தையல் பயிற்சிவகுப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்க மகளிர் மத்திய குழு இலவச தையல் பயிற்சி வகுப்புக்களை இம்மாதம் தொடக்கம் ஆரம்பித்துள்ளது. பண்டத்தரிப்பு, மாரீசன் கூடல், பெரியவிளான் சித்திரமேழி ஆகிய இடங்களில் இந்த இலவசபயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. (இ)


★ டெருசோ சிப்ஸ்
(Terrazzo chips)
எல்லா நிறங்களிலும் இறக்குமதி செய்யப்பட்டது.

★ காபரண்டம் பொலிஷிங் கற்கள்
★ நிலம் வெட்டும் மெஷின்கள்
★ அலுமினியம் தகடுகள் (Strips)
★ "ஸ்நோகிறீட்" வெள்ளை சிமெந்து ரூபா 12/- ஒரு கிலோ
★ பட்லோ வாட்டர் புரூவ் சிமெந் ரூபா 30/- ஒரு கிலோ
★ கலர் பவுடர் எல்லா நிறங்களிலும்
★ பேர்ட் பிரண்ட் லாச்சி, நைட் லாச்செஸ் மோர்டிஸ் பூட்டுகள்
★ தரைக்கு டெருசோ இடுதல் வேலையும் ஒப்புக்கொள்கிறோம்.

றும்சன்ஸ்
ஹார்ட்வெயர் என்டர்பிரைஸ் லிமிட்டெட்,
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு — 12
தொலைபேசி: 31511-34411

### மணிவாக்கு

ஓ மானிடனே! உன்னைச் செல்வம் தேடிவரும் போது மகிழ்ச்சியில் மூழ்காதே, துன்பத்தில் வீழ்ந்து பட்டாலும் துயரத்தில் ஆழாதே ஏனெனில் இரண்டுமே இருந்த இடம் தெரியாமல் கழிந்து போய்விடும்.

—பஹா உல்லாஹ்.

## நமது நோக்கு

# நாடு யாருக்குச்சொந்தம்?

இது ஒரு சுதந்திர நாடு; ஜனநாயகப் பாரம்பரியங்களைப் பேணி வளர்க்கும் நாடு; இது மக்களுக்கே சொந்தமானது; ஜனாதிபதிக்கோ அன்றி வேறு தனிப்பட்ட அரசியல்வாதிகளுக்கோ சொந்தமானதல்ல.

இந்த வார்த்தைகளைக் கேட்கும்போது காதுக்கு இனிமையாகவும் மனதுக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. ஆனல் நிதர்சனமாக நடப்பதென்ன?

ரயில்களில் அமைதியாகப் பிரயாணம்செய்ய முடிவதில்லை. முடிச்சுமாறிகள், சூதாட்டக்காரர்கள், கொள்ளையர்கள் போன்றோரின் அட்டகாசம் அதிகரித்துவிட்டது. போதாக்குறைக்கு அவ்வப்போது இனக்குரோதச் சம்பவங்கள் வேறு.

கோயில்களுக்குச் சென்று நிம்மதியாகத் தெய்வதரிசனம் புரியமுடியவில்லை. கோயில் உள்வீதியிலேயே கழுத்துச்சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஓடுகிறார்கள்.

பொதுச்சந்தைகளில் ஆறுதலாகச் சாமான்களை வாங்கிச் செல்ல முடியவில்லை. மதுவெறியில் வருபவர்களின் தொல்லைகள் சகிக்கவில்லை.

பொழுதுபோக்குக்காக இரவில் படக்காட்சிக்கோ, அல்லது வேறு கலைநிகழ்ச்சிகளுக்கோ குடும்பத்தோடு சென்று திரும்பமுடியாமலிருக்கிறது. நகர்ப்புறங்களில் தொழில்செய்துவிட்டு இரவில் வீடு திரும்புகிறவர்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு செல்கிறார்கள்.

திடீரென ஜீப்களில் வந்து இறங்கும் 'சிவில்' உடைகாரர்கள் கண்மண் தெரியாமல் தாக்குகிறார்கள். நோயாளிகள், வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் என்றெல்லாம் இவர்கள் பார்ப்பதில்லை.

திருடர்கள், கொள்ளையர்கள், முடிச்சுமாறிகள் போன்றவர்களின் தொல்லைகள் ஒருபுறமிருக்க காவல் துறையைச் சேர்ந்த இவர்களின் அட்டகாசம் மிக மோசமாகிக்கொண்டு வருகிறது.

இது மக்களுக்குச் சொந்தமான நாடா, அல்லது அவர்களின் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கும் ஆயுதப் படைகளுக்கே சொந்தமாகிவிட்டதா என்று கேட்கத் தோன்றுகின்றது.

நெல்லியடிச்சந்தியில் அண்மையில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சுடப்பட்டு இறந்ததும் வேறு சிலர் காயமடைந்ததும் கவலையளிக்கும் விஷயம்தான். இச்சம்பவத்தால பொலிசார் மத்தியில் விரக்தி மனப்பான்மை ஏற்பட்டிருப்பதும் இயற்கையே. அதற்காகஒன்றுமறியாத அப்பாவி மக்களைக் கண்ட கண்ட இடத்தில் காடையர் போன்று தாக்குதலில்இறங்குவது அத்துமீறிய செயலாகும். தவறிழைக்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதும் சட்டத்தின் முன்நிறுத்துவதும் காவல்படையினரின் கடமையேஅன்றி பொதுமக்களைத்தாக்குவதின் மூலம் தாங்களே தண்டனை வழங்குவதாகக்கற்பனை செய்து கொள்வது மடமை.

சில தினங்களுக்கு முன் யாழ். சந்தைப்பகுதியில் மதுவெறியில் நின்ற சிலர் முறைகேடாக நடந்து கொண்டபோது சில இளைஞர்கள் அதனைத்தடுக்க முயன்றதாகவும் அதைத் தொடர்ந்து ஜீப்பில் சிவில் உடையில் வந்த ஆயுதப் படையினர்அட்டகாசத்தில் இறங்கியதாகவும் கூறப்படுகிறது. காடைத்தனத்தைக் கண்டிப்பதும் தட்டிக்கேட்பதும் எந்த ஒரு குடிமகனுக்கும் உள்ள உரிமை. பொதுமனப்பான்மையுடன் நடந்து கொள்கிறவர்களை கோஷ்டியாக வந்து தாக்குவதும் அட்டகாசம் புரிவதும் ஆயுதப்படையினருக்கு அழகல்ல.

இவ்வாறான சம்பவங்கள் இப்பொழுது வடபகுதியில் சர்வசாதாரணமாகி வருவது ஒரு புறமிருக்க உயர்மட்ட அதிகாரிகளால் இவைகளைக் கட்டுப்படுத்த முடியாமலிருப்பது ஆச்சரியமளிக்கின்றது.

நெல்லியடி சம்பவமும் அதுபோன்ற ஏனைய சம்பவங்களும் சாதாரண பொதுமக்களுக்கு அப்பாற்பட்டவை. அவைகளைச் சம்பந்தப்படுத்தி சட்டம் ஒழுங்கை மதித்து நடக்கும் மக்களைத்தாக்குவதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தேர்தல் வருகிறது என்றாலே ஆயுதப்படையினரின் அட்டகாசமும் கூடவே வரப்போகின்றது என்ற வகையில் இப்பகுதி மக்கள் சிந்திக்கத்தலைப்பட்டு வருகிறார்கள். இந்த நிலைமை எதிர்காலத்திலாகுதல் தலைதூக்காமல் பார்த்துக் கொள்வது அரசின்கடமை.

# நாடகமேமூச்சு, அதுவேபேச்சு என்று வாழ்ந்த கலையரசு!

நாடகமே மூச்சு, நாடகமே பேச்சு, நாடகமே வாழ்வு என தனது வாழ்நாள் முழுவதும் வாழ்ந்த முதுபெரும் நாடகக் கலைஞர் கலையரசு க. சொர்ணலிங்ம் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தமை கலையுலகிற்குப் பேரிழப்பாகும்.

நாடகம் நடிப்பது இழிவு என்ற மனப்பான்மை ஈழத்திலே நிலவிய காலத்தில் நாடகத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு, கலைமெருகு முதலியவற்றால் அதற்குப் புதியதோர் வடிவம் கொடுத்து உன்னத நிலைக்கு உயர்த்தினார்.

நடிப்பு, ஒப்பனை, ஆடை அலங்காரம்,மேடையமைப்பு, இசை முதலிய துறைகள் கலையரசினால் புதுமைபெற்றன.

அவர் நடித்திருக்கிறார். கூனி, ஷைலொக், விசுவாமித்திரன், தத்தன் முதலியபாத்தரங்களை கலையரசுபோல் வேறு எவரும் நடிக்கமுடியாது என்று அவரது நாடகங்களைப்பார்த்தோர் இன்றும் வியக்கிறார்கள்.

'சோறு பச்சடி' என்ற அவரது நகைச்சுவைப் பாடல் பிரபலம் வாய்ந்தது.

அவர் ஒருமுறை முன்னாள் பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவைப்போல் வேஷமிட்டு அரசியல் வாதிகள் கூடியிருந்த சபையில் தோன்றிய போது எல்லோரும் பிரமித்து எழுந்துநின்றார்களாம்.

தமிழ் நாடகத்துறையில் அரிய சாதனைகளைச் சாதித்த திரு. சொர்ணலிங்கம் அவர்களுக்கு தமிழ் ரசிகர்களும் பிரமுகர்களும் 1953ம் ஆண்டு கலையரசு என்னும் பட்டத்தை வழங்கினார்கள்.

அவருக்கு கலைச்சக்கரவர்த்தி முத்தமிழ் வித்தகன், சேவாரத்தினம் இப்படியாகப் பதினைந்து பட்டங்கள் கலை அபிமானிகளால் வழங்கப்பட்டுள்ளன. இவரை 1981ம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகம் நாடக வித்தகர் என்று பட்டமளித்துக்கௌரவித்தது. இவர் எழுதிய ஈழத்தில் நாடகமும் நானும் என்னும் நூல் 1969ல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது.

நாடகமே என் மூச்சு என நாடகத்தைப் பற்றியே எந்நேரமும் பேசிக்கொண்டிருந்த கலையரசின் மூச்சு இன்று ஓய்ந்துவிட்டது என்று நாம் இலகுவாகச் சொல்லிவிடமுடியாது. கலையரசுவின் நாடகக் கலை மூச்சு இலங்கையிலுள்ள எத்தனையோ நாடகக் கலைஞரின் மூச்சுக்களாக பரம்பரை பரம்பரையாக என்றும்வாழ்ந்து கலைத்தாய்க்கு அணிசெய்து கொண்டிருக்கும் அந்த அளவிற்கு அவர் தனக்குப்பின்னால் பெரியசீடர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

அத்தகைய கலைப்பெரியாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

இன்றைய தமிழ்மேடை நாடகங்களுக்கு கலையரசு நடாத்திய அன்றைய நாடகங்கள் முன்னோடியானவையாகும்.

பம்மல் சம்பந்தமுதலியாரின் ஆசியுடன் லங்கா சுபோத விலாச சபாவை ஆரம்பித்த கலையரசு 1915-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் திகதி 'சிம்ஹள நாதன்' என்னும் நாடகத்தை மேடையேற்றினார்.

'அன்றையதினம் இலங்கையின் நாடக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டதினம்' என கலையரசுஎழுதியுள்ளார். ஏனெனில் அதுவரை இந்தியநாடகக் கலைஞர்களால்தான் நாடகங்களில் நடிக்கமுடியும், பாடமுடியும் என்று இங்குள்ளோர் நம்பியிருந்தார்கள்.

இந்த எண்ணங்களை மாற்றியமைத்த கலையரசு நடிப்பு, பாட்டு, வசனம் பேசுவது ஒப்பனை முதலியவற்றிலெல்லாம் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து எல்லோரையும் தனது நாடகங்களால் வியக்கவைத்தார்.

அவரது நடிப்பை மொழி விளங்காத பிறநாட்டவர்கள் கூட மெச்சியுள்ளார்கள்.

நாடகத்தில் எதைச்செய்தாலும் அதைப் புதுமெருகுடன் அவதானமாக ஆராய்ச்சி செய்தே அவர் செய்தார். முரண்பட்ட எத்தனையோ குணசித்திர பாத்திரங்களை

நவாலியூர் 'நடேசன்'

## யாழ்ப்பாணத்துப்பொதுசன நூல்நிலையம்-8

# நூலகத்துக்குமேலதிகஆதரவு

ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்றுவந்த நூல்நிலையமும் வாசிகசாலையும் நாள்தோறும் சராசரி ஐம்பது வாசகர்களுக்குப் பயன்கொடுத்துவந்தது நாள்தோறும் காலை 8 மணி தொடக்கம் மாலை 7-30 வரை பதினொரு மணித்தியால நேரம் பயன்கொடுத்துவந்தமை பாராட்டப்பெற்றது.

கௌரவ முகாமையாளர் ஒருவர், கௌரவ நூலகர் ஒருவர், சம்பளம்பெற்ற உதவி நூலகர் ஒருவர், நிர்வாகசபையினரின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நூலகத்தைத் திறம்பட நடத்திவந்தார்கள்.

பெரியகடைச் சூழலில் வர்த்தகர்கள் மத்தியில் நடைபெற்ற நூலகத்தின் பாரிய சேவையைக் கவனித்த வர்த்தகர்கள் சிலர், மாதாந்தம் இருபத்தைந்து சதம் முதல் இரண்டு ரூபாய்வரையிலான நன்கொடை கொடுத்து உதவி வந்தார்கள். அவர்களுக்கு மேலாக மாவட்ட நீதிமன்றம், பொலிஸ் நீதிமன்றம், காணிப் பதிவுத் திணைக்களம், கச்சேரி முதலான கந்தோர்களில் கடமையாற்றியோர் மாதாந்தம் தம்மாலியன்றளவு உதவிவந்தார்கள். ஆங்கில, தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அடிக்கடி விண்ணப்பங்கள் அனுப்பப்பெற்ற போதிலும் அவர்கள் எவரும் என்றும் ஏதும் அனுப்பவில்லை என்று காரியதரிசி கவலைபோடு குறித்துள்ளார்.

க.சி. குலரத்தினம்

### கூட்டுறவாளர் நன்கொடை

கரவெட்டியில் கூடிய கூட்டுறவாளர் சம்மேளன விழாவில் உதவி ஆணையாளர் ஏ. இரகுநாதன் செய்த முயற்சியால் ரூபா 236-90 சதம் திரட்டப்பெற்றது.

### வெளியில் பணம்திரட்டிய அன்பர்கள்

கொழும்பில் காணிக்கந்தோர் ப. சுந்தரம் அவர்களும், சிங்கப்பூரில் மாநகர சபையில் எம். முருகேசு அவர்களும் முயன்று திரட்டியனுப்பிய பணமும் பெரும் உதவியாயிருந்தது'

### கௌரவ கல்விமந்திரியாரின் கனிவு

நூலகத்துக்கு ஏதாவது உதவியாகவோ மானியமாகவோ நிதியுதவுமாறு கௌரவ கல்வியமைச்சர் அவர்களுக்கு எழுதியதால் அவர் 1935—1936 ஆகிய ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் தாம் 2000 ரூபா கேட்டுள்ளதாக எழுதியிருநதாா. அதுகிடைத்தால் அதில் ஒரு பகுதியை யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கலாம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

### நூலகவளர்ச்சி

யாழ்ப்பாண வரலாறு எழுதிப் புகழ்பெற்ற முதலியார் சி. இராசநாயகம அவர்கள், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்றப் பதிவாளர் ஆர். சி. புரூக்

(8-ம் பக்கம் பார்க்க)

# நல்லூரில் திருட்டு!

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் முதல் நாளன்றே சில திருட்டுகள் நடந்திருப்பது கவலையளிக்கினறது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதாக இல்லையென்பதையே இது காட்டுகிறது. கடந்த ஆண்டும் இதே போன்ற சம்பவம் இடம் பெற்றிருப்பதால் அதிகாரிகள் எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும.

இதில் அதிகாரிகளை மாத்திரம் குறை கூறுவதில் அர்த்தமில்லை. பெருந்தொகையில் மக்கள் கூடும் இடங்களுக்குச் செல்கையில அவசியமில்லாத நகைகளையெல்லாம் அணிந்து செல்லும் வழக்கத்தை மக்கள் கைவிடவேண்டும். கூடிய வரை குழந்தைகளுக்கு நகைகளைப் போடாமலே அழைத்துச் செல்வது நல்லது. தெய்வத்தை வணங்கச் செல்கிறவர்கள் தெருவீதியில் நின்று அவலப்படும் நிலை வராது. அது மாத்திரமன்று திருவிழாக்களில் திருட்டு போன்ற சம்பவம் நடைபெறும் போதும் திருடன் ஓடித்தப்ப முயலும் போதும் மக்கள் பார்வையாளர்களாக மாறி விடுவது கவலைக்குரிய விடயம். மக்கள் விழிப்பாக இருந்தால் இச் சம்பவங்கள் குறைய இடமுண்டு. அதிகாரிகளும் தம் கடமைகளைச் சரிவரச் செய்ய உதவியாய் இருக்கும்.

## நல்லைக்கந்தன் 3-ம் திருவிழா

வளைபட்ட கைம்மா தொடு மக்களெனும்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூர் உரமும் கிரியும்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே.

—கந்தரனுபூதி

## யாழ். ஐக்கிய நா. ச. சமாஜத்திற்கு
# 50 ஆயிரம் ரூபா கடன் உதவிகிட்டும்
## கூ. ஆணையாளர் தகவல்

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாஜத்திற்கு 50 ஆயிரம் ரூபாவைக் கடனுக வழங்குவதற்கு கூட்டுறவுத்திணைக்களம் முன்வந்துள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற சமாஜ பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டுறவுஆணையாளர் திரு. அஸ்ரின் பெர்னுண்டோ இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ். தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவரும், கோப்பாய் தொகுதி எம். பி.யுமான திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கொழும்பிலுள்ள தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. எம். பி. போகோலகம. பிரதிகூட்டுறவு ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மேற்படி சமாஜத்தின் சார்பில் 17 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கூட்டுறவு ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாணய சங்கங்களின் வளர்ச்சி குறித்து சமாஜம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு கூட்டுறவுத் திணைக்களம் தேவையான உதவிகளைச் செய்துதர ஆயத்தமாகஇருப்பதாகவும், யாழ். மாவட்டத்தில் மூடப்பட்ட கூட்டுறவு வங்கியை மீண்டும் திறந்து இயங்கச்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருப்பதாகவும், மக்கள் வங்கியின் இயக்குனர் சபைக்கு கூட்டுறவுத்துறையிலிருந்து இரு உறுப்பினர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவு ஆணையாளர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தார். [இ]

## பேச்சுப் போட்டி முடிவுகள்

(கோண்டாவில்)

அகில இலங்கை வள்ளுவர் சமூக மறுமலர்ச்சி இயக்கம் வடமாகாண ரீதியாக, பாரதி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு நடாத்திய பேச்சுப் போட்டியில் பின்வருவோர் பரிசில்கள் பெற்றனர்.

செல்வி கு. சத்தியபாமா[திருநெல்வேலி], செல்விஅ. சாரதி [மானிப்பாய்], செல்வி சோ. இதயராணி [யாழ்ப்பாண ], செல்விலோ. புவனேஸ்வரி [மயிலிட்டி], செல்வி ம. காமினி [புங்குடுதீவு], செல்விஐ. சரஸ்வதி[மடம்வீதி , செல்வி பொ. ரேணுகா [சாவகச்சேரி], செல்வி சி. திருவருட்செல்வி [பளை], செல்வன் செ. நிமலன் [பரந்தன்], செல்வன் அ. இரவீந்திரன்(நயினுதீவு).

வெற்றியீட்டியவர்களுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. சி. நாகராசா பரிசில்களை வழங்கினுர்.

## கதிர்காமத்துதி

முதிரவரு மன்பருளு மூகிப்பே போற்றி
மூவாத பேரின்ப முதலே போற்றி
அதிரவரு தேவர்படைக் கதிபா போற்றி
ஆறங்கத் தான்பயந்த அழகே போற்றி
எதிரவரு சூர்தடிந்த எழிலாய் போற்றி
ஏறுமா தவத்தவர்பா லெழுவாய் போற்றி
கதிரமலை யமர்ந்தவருட் கந்தா போற்றி
காருண்ய ரூபனெ போற்றி போற்றி.

ச. தங்கமாமயிலோன்

## நீர்வைப.நோ.கூ.சங்கத்திற்கு ஆணையாளர் பாராட்டு

[நீர்வேலி]

வடபகுதியில் சிறந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக வலி கிழக்குத் தென்பகுதி பலநோக்குக கூட்டுறவுச் சங்கம் விளங்குவதாக மேற்படி சங்கத்தில் தமக்கு அளிக்கப்பட்ட மதியபோசன விருந்தில் பேசுகையில் கூட்டுறவு ஆணையாளரும், பதிவாளருமான திரு. ஒஸ்ரின் பெர்ணுந்து குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் சிறந்த தலைவரினதும், நெறியாளர், பணியாளர்களினதும் அயரா முயற்சியே இச் சிறப்புக்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டியதுடன் கடந்த மூன்று வருடங்களாகத் தொடர்ந்து வருடா வருடம் மூன்று லட்ச ரூபாய்களுக்குமேல் இலாபமடைந்து வருவது பாராட்டப்பட வேண்டியது எனவும் கூறினுர்.

சங்கத்தின் தேவைகள் சம்பந்தமான மகஜர் ஒன்றினைச் சங்கத் தலைவர் திரு. செ.சபாரத்தினமும் ஊழியர்களைத் தரம் உயர்த்தக் கோரும் மகஜர் ஒன்றினை ஊழியர்தொழிற் சங்கச் செயலாளர் த. பரராசசிங்கம்மும் சமர்ப்பித்தனர்.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இவ் விருந்துபசாரத்தில் இலங்கை தேசியக் கூட்டுறவுசபைத் தலைவர் திரு. எம்.பி. பொகல்கம, வடபகுதி தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம், சிரேஷ்ட கூட்டுறவுஆணையாளர் திரு. எஸ். சண்முகலிங்கம், மேலதிக உதவிஆணையாளர் திரு. ஜெயகாந்தன், உதவி ஆணையாளர்கள் திரு. எஸ். ஞானப்பிரகாசம் திரு. வி. நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர். [அ]

## ஸ்ரீபாலயோகி பிறந்தநாள்

பகவான் ஸ்ரீபாலசிவ யோகேந்திர மகராஜ் விஸ்வ சாந்திதேஜ் அவர்களின் பிறந்ததினவிழா அவர்களது பக்தர்களால் இன்று 27-ந் திகதி கைதராபாத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

சுவாமி கடப்பை மாவட்டத்திலுள்ள நெல்லூரில் தங்மருப்பள்ளி என்னும் கிராமத்தில் இறைபக்திமிக்க குடும்பத்தில் பிறந்த இவருக்கு பெற்ரேர் வைத்த பெயர் ஈஸ்வரவரபிரசாத்.

இவர் இளம் வயதில் மிகுந்த கடவுள் பக்தியுடையவராக விளங்கினுர். அத்தோடு பல அற்புதங்களையும் செய்து காட்டினுர். அவரது அற்புதங்களை ஏராளமான மக்கள் கண்டு வியந்தார்கள்.

இவரது அற்புதங்களை கண்ட பக்தர்கள் பக்தி மேலீட்டினுல் பாலசிவசுவாமி என்று அழைக்க ஆரம்பித்தார்கள். நெல்லூரிலும் அடுத்த கிராமங்களிலும் சுவாமி அவர்கள் அழைக்கப்பட்டார்.

சுவாமிகளது வாழ்க்கைக் குறிப்புகளை விரிவுபடுத்தியும் அவரது அற்புதங்களை குறிப்பிட்டு நூல் ஒன்றை அவரது பக்தர்களில் ஒருவரான வேலணையைச் சேர்ந்த திரு. எஸ். ஐ, தனபாலசிங்கம் வெளியிட்டுள்ளார். இவர் ஸ்ரீ பால சிவ சர்வதேச சமாதான ஸ்தாபனத்தின் யாழ். கிளையின் செயலாளர் ஆவார்.

என். ஆர். சந்திரன்.


# அக்றிமெக் போரடிக்கும் கருவி



நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்தி நேர்த்தியான சிதையாத நெல்மணி பெறுங்கள்!

மூன்றே மூன்று ஆட்களுடன் ஒரு நாளில் ஒரு ஹெக்டார் வயல் விளைச்சலுக்கும் அதிக நெல்லை அக்றிமெக் போரடிக்கும் கருவி கொண்டு அறுவடை செய்யலாம்.

இடத்துக்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய கருவி இது. எனவே வயலில் எந்த இடத்திற்கும் இலகுவாக எடுத்துச் சென்று, மழை நேரத்திலும் கூட இதனை இயக்கலாம்.

அக்றிமெக் போரடிக்கும் கருவி மூலம். ட்ராக்டர் பாவனையால் ஏற்படும் பணத்தை மீதப்படுத்தலாம். அத்துடன் வேலையாள் தேவையும் குறைவு.

எந்த எஞ்சின் அல்லது கையால் இயக்கும் ட்ராக்டருடனும் இணைக்கலாம்.

கருவியின் விலை

ரூ.8,500/= மட்டுமே!

சுலபமான சிறந்த பணிக்குப் பாவியுங்கள் அக்றிமெக்





Agrimec

தயாரித்து விற்பனை செய்வோர்:

ஜினசேன லிமிட்டெட்
4, உணுப்பிட்டி வீதி கொழும்பு 2.
தொலைபேசி: 26558, 26559

Mel Ads

## இரத்ததானம் செய்து உயிரைக் காத்தனர்

[புலோலி]

பருத்தித்துறை இரத்த தான தொண்டர் சபையைச் சேர்ந்த மூன்று உறுப்பினர் களும் மற்றுமொரு சிங்கள பொலிஸ் கான்ஸ்டபிளும் தகுந்த நேரத்தில் இரத்ததா னம் செய்தமையினால் உயி ருடன் போராடிக்கொண்டி ருந்த பருத்தித்துறை முன்னாள் நகரசபை உறும்பினரின் உயிர் காப்பாற்றப்பட்டது.

டாக்டர் கே. லலித்குமார், பட்டயக்கணக்காளர் திரு. ஏ. சோமசுந்தரம், பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி ஆகிய தொண்டர் சபை உறுப்பினர் களும் சுன்னுகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ் டபிள் திரு, பியசேனவுமே இரத்ததானம் வழங்கியவர்க ளாவர். இந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் மனைவி ஒரு தமிழ்ப்பெண். மந்திகை அரசி

[7-ம் பக்கம் பார்க்க]

“உரிமைக்காகப் போராடும்

# நாம் எமக்கிடையேயான மோதலை நிறுத்தவேண்டும்”

## ‘யோகேஸ்’ கூறுகிறார் !

[கோண்டாவில்]

இன ரீதியாக உரிமைக்காகப் போராடும் நாம்எமக்கிடையே கொலை செய்வதையும்மோதல் களையும் நிறுத்திக் கொள்ள வேண்டும். நாம் இன்று பின் தங்கிய நிலையில் காணப்படுவ தற்கு காரணம் எம்மிடையே பல ஆண்டுகளாககாணப்பட்டு வந்த ஒற்றுமையின்மையேயா கும், இந்நிலை மாறி எம்மி டையே ஒற்றுமை ஏற்பட்டு வரும் இவ்வேளையில் கிராம மட்டங்களில் நடைபெறும் பிரச்னைகள் எமக்கு வேதனை அளிக்கிறது.

இவ்வாறு யாழ்ப்பாணம் எம் பி. திரு வி. யோகேஸ் வரன் கூறினார்.

அகில இலங்கை வள்ளுவர் சமூக மறுமலர்ச்சி இயக்கமும், மகாத்மாஜி சனசமூக நிலைய மும் இணைந்துநடாத்தியபாரதி நூற்றாண்டு விழா திரு ஆ. சோமு தலைமையில் திருநெல் வேலி மகாத்மா சனசமூக நிலைய முன்றலில் நடைபெற் றது.

திரு யோகேஸ்வரன் மேலும் பேசுகையில் அரியாலையில்அண் மையில் நடைபெற்ற சம்ப வத்திற்கு பொலிஸ் பாதுகாப் புக் கேட்டபோது அவர்கள் பாதுகாப்புத்தர மறுத்துவிட் டார்கள். அதற்கு அவர் கள் நெல்லியடியில் நடைபெற்ற சம்பவத்தையே சுட்டிக்காட்டுகின்றார்கள். நாம் எப்பொழுது பாதுகாப்பற்ற வர்களாக இருக்கின்றோம். எம்மிடையே போட்டி பொறு மைகள் இருக்கக்கூடாதென் றார்.

பாரதி நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு சமூகமட்டத்தில் வடபகுதிரீதியாக நடாத்திய பேச்சுப்போட்டியில் வெற்றி யீட்டியவர்களுக்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு சி.நாகராசா பரிசில்கள் வழங்கினார்.

கோப்பாய் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. த. துரைமணி ஆகியோரும் உரை யாற்றினர். (ஓ)

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ரயில் நிலையத்தில் பணி புரிந்த சிற்றூழியர் களான திருவாளர்கள் வி. துரைசிங்கம், எச். டபிள்யூ. பிரேமச்சந்திரா ஆகிய இரு வரும் பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்று கொழும்பு, கலாவெவ ரயில் நிலையங்களுக்குச் சென்றுள்ள னர்.

யாழ். ரயில் நிலையத்தைச் சேர்ந்த சக ஊழியர்கள் இவர் கள் இருவருக்கும் தேநீர் விருந்துபசாரம் ஒன்றை அளித்தனர்.

## நஷ்டஈடு வழங்க தீர்ப்பு

[கிளிநொச்சி]

படுகாயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக் கில் கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் திரு. வி ஜெகசோதி 5 எதிரிகளுக்கு 6 மாத ஒத்தி வைக்கப்பட்ட சிறையும், தலா 200 ரூபா காயப்பட்ட வருக்கு நஷ்டஈடும் வழங்கு மாறு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

திருநகரைச் சேர்ந்த வேலு ஜெயராசசிங்கம் என்பவரை அதே இடத்தைச் சேர்ந்த சி. யோகநாதன்; காசீம் அப்துல் காதர், த. சவுந்தரராசா, காசீம், மு இக்பால் ஆகியோர் கூரான ஆயுதத்தினால் தாக்கி படுகாயம் விளைவித்ததாக இவ்வழக்கில் குற்றம் சாட்டப் பட்டிருந்தது. (க)





உன்னத தரத்தின் உயர் சுவை- உலகெங்கும்!

சுவிட்சர்லாந்து முதல் ஹொங்கொங் வரை, இத்தாலி முதல் மேற்கு இந்தியத் தீவுகள் வரை, உலகெங்குமுள்ள மக்களின் அபிமானம் பெற்றது இனிப்பூட்டிய மில்க்மெயிட் கட்டிப் பால்.

மில்க்மெயிட் அதி சுத்தமானது, அதி மிருதுவானது, அதி சுவை மிக்கது-ஏனெனில் அது உடன் கறந்த பசுவின் பாலில் உங்களுக்கென்றே தயாரித்தது. அத்துடன் அது கெட்டித்த செறிவு மிகுந்து விளங்கக் காரணம், சர்வ தேச உயர் தராதர விதிகளுக்கமைய நெஸ்லே நிறுவனம் அதைத் தயாரிப்பது தான்

மில்க்மெயிட் சிக்கனமும் மிக்கது. ஏனெனில் அது முன்னரே இனிப்பூட்டியது. எனவே, கோப்பைக் கணக்கில் அதி மதுரமான தேநீர், கோப்பிப் பானங்களை நீங்களே வழங்கினாலும் உங்கள் செலவு கை மிஞ்சிப் போகாது.

மில்க்மெயிட் பாவியுங்கள். உலகெங்கும் அது மிக விரும்பப்படும் காரணத்தைக் கண்டறியுங்கள்




விலை ரூ. 11/90-397 கிராம்

மில்க்மெயிட் அற்புதமான இலங்கைத் தேயிலையை மேலும் அதி சுவை பெறச் செய்யும்.

HTL CN 1103

## இரத்ததானம்....

[6-ம் பக்கத் தொடர்ச்சி

னர் ஆஸ்பத்திரியில் தாதியாகப் பணியாற்றுகிருர்,

மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவந்த முன்னுள் நகர சபை உறுப்பினர் திரு. எஸ், சுந்தரலிங்கத்தின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக இரத்தம் தேவைப்படுவதாக பேற்படி தொண்டர் சபைக்கு அறிவித்தபோது அவர்கள் நால்வரும் முன்வந்து தானம் செய்தனர்.

[இ]


4-வது வாரம்
வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கமலஹாசன்-ஸ்ரீதேவி
குரு (கலர்)

HARAN (Jaffna) Daily 5 Shows
Spectacular Fights. A film that will entertain you from sart to finish
Starring Sonny Chiba.
"Chiba is the natural – Successor to Bruce Lee"
Play Boy Magazine
KARRATE WARRIORS
(Strictly for Adults)

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
ஜெமினி, பத்மினி, எம். ஆர். ராதா, நாகேஷ்
சித்தி
(புதிய பிரதி)

ராணி (யாழ் நகர்) 4-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்–சாவித்திரி
மகாதேவி

லிடோ (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
100வது வெற்றித் திருநாளை நோக்கி
கார்த்திக்-ராதா-தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

இன்னும் 3 தினங்கள் மட்டும்
றீகல் [யாழ்நகர்] தினசரி; 10-30, 2-30, 6-15, 9-30
ரஸிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
மோகனப் புன்னகை (கலர்)
30-7-82 முதல் 'கயலும் கயரும்' (மலையாளம் கலர்)

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
27—29-7-82 மூன்று தினங்கள் மட்டும்
சிவாஜி ஜெயலலிதா "பட்டிக்காடா பட்டணமா" புதிய பிரதி

ஸ்ரீதர் (யாழ்.நகர்)
10-30, 2-00, 4-30. 7-00, 9-30
JIM KELLY in
The Tatoo Connection
(Karate Film)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர், ஜெயலலிதா, சோ நடித்த
வந்தாளே மகராசி
இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி


## இன்றைய பலன்

ஆடி மாதம் 11-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(27—7—82)

மேடம்: கவர்ச்சிகரமான தினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும். களஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும். செல்வாக்குப் பெருகும்,

இடபம்: அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். சலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டக்கூடும்.

மிதுனம்: எண்ணிய கருமத்தில் இன்று வெற்றி உண்டு. புண்ணிய வழிகளில் பொருட் செலவும் ஏற்படும். கண்ணியமான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படலாம்.

கடகம்: பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும். வார்த்தையில் வசீகரமும், வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

சிங்கம்: முயற்சியின் மூலம் முதலிடத்தைப் பிடித்துக் கொள்வீர்கள். பல வழிகளிலும் பணம் கைவந்து சேரும். உற்சாகமளிக்கும் செய்தி ஒன்று கிடைக்கலாம்.

கன்னி: பலவழிகளிலும் தொல்லைகள் தோன்றும். விரக்தி மனப்பான்மையுடன் நடமாடுவீர்கள். தொழில் புரியும் இடத்தில் எதிரிகள் மறைமுக நடவடிக்கையில் இறங்குவர்.

துலாம்: குடும்பத்தில் சுகக் குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம்கவலைகள் உருவாகும். முன்னேற்றப் பாதையில் முட்டுக்கட்டை போடுவதற்கு முயற்சி நடைபெறும்.

விருச்சிகம்: இதயப்படுதாவில் இன்பக்கூத்து. வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும். கற்றதனுல் பயன் இன்று கைமேல் கிடைக்கும். மகிழ்ச்சிகரமான தினம்.

தனு: அவசரக் கோலம் தலைகாட்டும். அதன்வழித் துன்பங்கள் தொடரும். ஆசாரக்குறைவும் உண்டு. ஆணவப் போக்கினுல் மற்றவர்களைப் பகைக்க நேரிடலாம்.

மகரம்: புதிய சூழ்நிலைஉங்களுக்குப் புத்துணர்ச்சியைஅளிக்கும். பெரியோர்களின் ஆதரவும் கிடைக்கும். குடும்ப வாழ்க்கை கற்கண்டு போல் இன்று இனிக்கும்.

கும்பம்: இதயக் கமலம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும். கடமையில் புதிய ஆர்வம்பிறக்கும். கற்றதனுல் பயன்கிடைக்கும்.

மீனம்: கன்னல்போல்வாழ்வு கருத்தினில் காதல் மோகம். மின்னல்போல் மறையும் தொழில் புரியும் இடத்தில் தொல்லைசள் தோன்றககூடும்.

சோதிடகலாநிதி
திருமலை
கூ. வேலுப்பிள்ளை

## கடனுதவி

[புலோலி]

புலோலி தெற்கு மாதர்கிராமஅபிவிருத்திச் சங்கம் உலகவிஷன் ஸ்தாபனத்திடமிருந்து பெற்ற பணத்தில் அங்கத்தவர்கள் பதின்மூன்று பேருக்கு மாடு வளர்த்தல், உணவு தயாரித்தல், கைவேலை செய்தல் கடன்களை வழங்கியது.

மாடுவளர்ப்புக்கு, 750 ரூபா வீதம் மூவருக்கும், உணவுதயாரித்தலுக்கு 150 ரூபா வீதம் ஐவருக்கும் கைவேலைக்கு தலா 250 ரூபாவீதம் ஐவருக்கும் இக் கடன்கள் வழங்கப் வட்டுள்ளன.

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. சிவசுப்பிரமணியம், உதவிகிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. என். பஞ்சலிங்கம் ஆகியோர் இக்கடன் பணங்களைச் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்கினர்.

## பருத்தித்துறை....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் தலைமையில் இப்பிரதேச சபைத் தலைவர் தெரிவு நடைபெறவுள்ளது.

இப் பகுதியில்உள்ள 15 கிராமசேவை அலுவலர் பிரிவுகளினதும் கிராமோதய சபைத் தலைவர்களும் இத்தலைவர் தெரிவில் பங்குபற்றுவார்கள்.

பல திணைக்களங்களின் உயரதிகாரிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க)



இணுவில் கிராம சேவையாளராகவும். சமாதான சபைத் தலைவராகவும் கடமையாற்றிய திரு. சீ. தியாகராசாவின் சேவையைப் பாராட்டி மக்களால் நடாத்தப்பட்ட வரவேற்பு-சேவைநலம் பாராட்டு விழாவில் சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன் திரு. சீ. தியாகராசாவுக்குப் பாராட்டுப் பத்திரம் வழங்குகிருர்.

### வெளிநாட்டு அங்கீகாரத்தால்

# நாம் விடுதலை பெறமுடியாது

## மாணவர் தலைவர் கூறுகிருர்

(பண்டத்தரிப்பு)

"எமது சுதந்திரத்தை பிறநாடுகள் அங்கீகரிப்பதால் மாத்திரம் நாம் விடுதலைபெற்றுவிடமுடியாது. ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே நாம் விடுதலையை பெறமுடியும் என்பதற்கு இன்று பாலஸ்தீன மக்கள் நடாத்திவரும் போராட்டம் ஒரு உதாரணமாக விளங்குகின்றது."

இவ்வாறு ஈழமாணவர் பொதுமன்றம் பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மானிப்பாய் பட்டின சபை மண்டபத்தில் நடாத்திய கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் பல்கலைக்கழகமாணவர் அவைத்தலைவர் திரு.கே.என். இராசநாயகம் குறிப்பிட்டார்.

பாலஸ்தீன மக்களின் போராட்டத்தைப்பற்றியகண்காட்சியொன்றும் அங்குநடாத்தப்பட்டது. ஈழமாணவர் பொதுமன்றத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. மு. டேவிற்சன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராசநாயகம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

'பாலஸ்தீன மக்களின்எதிர்ப்பியக்கத்தையும், அவர்களின் முன்னணிச் சக்தியான பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் மத்திய கிழக்கிலிருந்து அகற்றுவதே இஸ்ரேலிய படை எடுப்பின் முக்கிய நோக்கமாகும். உலகின் நடுநிலை நாடுகள் யாவும் இன்று இஸ்ரேலின் தாக்குதல்களை பலமாக கண்டித்துவருகின்றன. லெபனுனில் போராட்டம் நடாத்தும் பாலஸ்தீன விடுதலைப் படைகளில் தமிழர்களும் இருக்கின்ருர்களா? அவர்களில் புலிகளும் உண்டா? என்றெல்லாம் இந்நாட்டு அரசாங்கம் ஆராய்ந்து அறிவதில் அதிகஅக்கறை கொண்டுள்ளது. போராட்ட களத்தில் இறங்கி வீரமரணப் போராட்டம் நடாத்திவரும் பாலஸ்தீன மக்களுக்கு எந்த வகையில் தாம் உதவலாம் என்று அரசாங்கம் சிந்திக்கவில்லை, ஆராயவும்இல்லை.

### தமிழ்ப்பகுதிகளில் சுதந்திரமாக உலாவமுடியவில்லை

இன்று எமது தமிழ் பகுதிகளில் மக்கள் சுதந்திரமாக உலாவமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பயங்கரநிலை இங்கும் நிலவிவருகின்றது. சிங்களக் குடியேற்றங்களால் எமது பிரதேசம் பறிபோய்க்கொண்டிருக்கிறது. இதை எதிர்த்து போராட்டம் நடாத்தவேண்டிய எமது கட்சிகள் பேச்சு வார்த்தை என்று சரணாகதியடைந்துவிட்டன.

ஒரு இனத்தின் விடுதலையை ஒப்பந்தங்களாலும் பேச்சுவார்த்தைகளினுலும் பெற்றுவிடமுடியாது. மக்களின்ஒன்றுபட்ட எதிர்ப்பியக்கத்தின் மூலமும் போராட்டத்தின் மூலமுமே பெறமுடியும் என்பதை பாலஸ்தீன மக்களின் போராட்டங்கள் உணர்த்துகின்றன. காம்ப் டேவிட் ஒப்பந்தத்தினுல் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பாலஸ்தீனர்களே.

[இ]

## மருந்துச்சாலை

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறை தொகுதியிலுள்ள 'வசந்தபுரம்' மாதிரிக் கிராமத்தில் பகுதிநேர அரசினர் மருந்துச்சாலை ஒன்று விரைவில் நிறுவப்படவுள்ளது. சேந்தாங்குளத்திற்கு அண்மையிலுள்ள இந்த வசந்தபுரம் மாதிரிக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சர்வோதயா மண்டபத்தில் இந்த பகுதி நேர மருந்துச்சாலைவிரைவில்திறந்து வைக்கப்படவுள்ளது. பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் தற்போது கடமையாற்றும் டாக்டர் ஒருவரே பகுதி நேரமாக இந்த மருந்துச்சாலையிலும் கடமையாற்றுவார் என்றும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது. இந்த மருந்துச்சாலையை விரைவில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ். சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

(இ)

## 6 மாத நன்னடத்தையும் ரூபா500 பிணையும்

[கிளிநொச்சி]

திருட்டுப்போன 400 ரூபா பெறுமதியான மாடொன்றை வைத்திருந்த நபரொருவருக்கு கிளிநொச்சி நீதிமன்ற நீதவான் திரு வி. ஜெகசோதி 6 மாத நன்னடத்தையுடன் 500 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவுபிறப்பித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கல்யாணி இராசையா என்பவர் 400 ரூபா பெறுமதியான களவுபோன மாட்டை வைத்திருந்ததாக கிளிநொச்சி நீதிமன்ற பொலிஸ் சார்ஜன்ட் திரு. எம். சார்தகுமாரால் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்நபர் குற்றவாளியாகக் காணப்பட்டு மேற்படி தண்டனை வழங்கப்பட்டது.

# பனம்பொருள் அபிவிருத்தி ஆலோசகர் இலங்கை விஜயம்

[புலோலி]

தமிழ்நாடு காதியன் கிராமிய கைத்தொழிற் சபைப் பணிப்பாளரும்,பனம்பொருள் அபிவிருத்தி விசேட ஆலோசகருமான டாக்டர் எம். கே. சம்பந்தன் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார்.

புதுடில்லியிலிருக்கும் இலங்கைத் தூதுவர் திரு. ஜெயந்த தனபால இத்தகவலை பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு.என் பி.ஜெகநாதனுக்கு அறிவுத்துள்ளார்.

பொதுநல ஏற்றுமதி சந்தைப்படுத்தல் அபிவிருத்திப் பகுதியின் நிதிஉதவியினுலேயே டாக்டர் சம்பந்தன் இங்கு வருகிறார்.

இவர் இலங்கையின் தற்போதைய பனம் பொருள் அபிவிருத்தி நிலைமை, மேம்பாடு என்பனபற்றி ஆராயவுள்ளார். இலங்கையிலிருந்து வெளிநாட்டிற்கு பனம்பொருள்களைஏற்றுமதி செய்வதை ஊக்குவித்தல் பற்றி ஆலோசனையும் வழங்கவுள்ளார்.

பனம்பொருட்களின் குறுகிய நீண்டகால அபிவிருத்தித் திட்டங்கள், பனம்தும்பிலிருந்து நவீனபிறஸ் தயாரித்தல்,சாலை இயந்திரங்களைத்துப்பரவு செய்யும் துடைப்பங்களை நவீன தொழில் நுட்பமுறையில் தயாரித்தல். ஏற்றுமதி செய்வதற்குரிய பாய்கள், ஏற்றுமதிக் கூடைகள், தொப்பிகள், தட்டுகள், கைத்தொழிற் பொருட்கள் தயாரித்தல், கோடியல், பனஞ்சிரப், கல்லக்காரம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு தயாரித்தல், பனைஓலையில் அச்சடிக்கும் முறைகள் பற்றியும் ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

திரு. சம்பந்தன் பனைவள அபிவிருத்தி சம்பந்தமாக பதினெரு புத்தகங்களை எழுதியுள்ளார். இதில் "பனையும் பயனும்", "கழிவைக் காசாக்குவோம்" என்ற இரு புத்தகங்கங்களும் இந்திய அரசின் பரிசைப் பெற்றவையாகும்.

## முகமூடித் திருடர்களுடன் போராடி மனைவியின் தாலிக்கொடியை காப்பாற்றினுர் கணவர்

(மன்னுர்)

இரவில் சைக்கிளில் சென்ற தம்பதியினரை வழிமறித்து பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை வழிப்பறிசெய்ய எத்தனித்த முகமூடி கொள்ளையரின் முயற்சி தோல்வியில் முடிந்தது.

பேசாலையில் இரவு 11மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் பேசாலையைச் சேர்ந்த டி. பிரான்சிஸ் குலால் என்பவரின் மனைவியின் தாலிக்கொடியே வழிப்பறி செய்யப்படவிருந்தது, இச் சம்பவம் பற்றிக்கூறப்படுவதாவது.

சம்பவதினம் இரவு தமது வர்த்தகநிலையத்தைமூடிவிட்டு சைக்கிளில் வீட்டுக்கு சென்ற போது மீன்பிடி கூட்டுத்தாபனத்தடியில் எதிரே வந்த முகமூடி அணிந்த இருவர் சைக்கிளில் சென்ற தம்பதிகளைக்கீழே தள்ளி விட்டனர். அவர்கள் கீழே விழுந்ததும் முகமூடி அணிந்த ஒருவன் பெண்ணின் கழுத்தில் இருந்த தாலியை அறுக்க எத்தனித்த போது கணவன் அம்முகமூடி திருடனுடன் போராடி மனைவியின் தாலியைக் காப்பாற்றினுர்.

இது பற்றி மன்னுர் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பில் திருடப்பட்ட சேலைகள் யாழ்.கடையில்மீட்பு

### இருவர் கைது

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பிலுள்ள புடவைக் கடையொன்றில் திருடப்பட்டதாக கருதப்படும் சாரிகள் யாழ். நகரிலுள்ள புடவைக் கடையொன்றிலிருந்து காங்கேசன்துறைப் பொலிசாரினுல் கைப்பற்றப் பட்டுள்ளன,

சில தினங்களுக்கு முன்பு பண்டத்தரிப்பு நவீன சந்தைக் கட்டிடத்திலுள்ள புடவைக் கடையொன்றின் கூரை பிரிக்கப்பட்டு அங்கிருந்த சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதி மிக்க துணிகள், சாரிகள் ஆகியவை கொள்ளையடிக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து யாழ். நகரிலுள்ள புடவைக்கடையொன்றில் பொலிசார் திடீர் சோதனை நடத்தினர். அப்போது திருட்டுப்போன சாரிகளில் பல அங்கு விற்பனைக்கு வைத்திருக்க காணப்பட்டனவாம்.

பிரஸ்தாப புடவைக்கடை உரிமையாளர் கொடுத்த தகவலைக்கொண்டு இக்கொள்ளைக் கோஷ்டியுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இரண்டு நபர்களை காங்கேசன்துறைப் பொலிசார் கைதுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நூலகத்துக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கர், கௌரவ நூலகர் சி எஸ். இராசரத்தினம் அவர்கள், உதவி நூலகர் பி. ஜி.ஜோர்ச் அவர்கள் யாழ்ப்பாணப்பொது நூலகத்திற்குப் போதியளவு சேவைசெய்து புகழ்பெற்றிருந்தார்கள்.

நூலக வளர்ச்சிக்கு யாழ்ப்பாணத்துச் சட்டத்தரணிகளும், அரசாங்க உத்தியோகத்தர்களும், வர்த்தக பிரமுகர்களும் அவ்வப்போது உதவி செய்த பெருந்தன்மையை இணைக்காரியதரிசிகளாகிய சி பொன்னம்பலம் அவர்களும், க. மு. செல்லப்பா அவர்களும் தங்கள் அறிக்கையில் அவர்களை வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளார்கள்.

(தொடரும்)

## அரியாலையில் சமரசத்துக்கு உறுதி

[யாழ்ப்பாணம்]

அரியாலையில் கடந்த ஒரு வாரகாலமாக நடைபெற்ற கோஷ்டிக்கலவரத்தில் சம்பந்தப்பட்ட பகுதியினர்இனிமேல் எந்தவிதமான அசம்பாவிதமான சம்பவங்களிலும் ஈடுபடுவதில்லை என்று யாழ்.மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சமரசமகாநாட்டில் உறுதியளித்துள்ளனர்.

யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நேற்று காலை இந்த சமரசமகாநாடு நடைபெற்றது,

இம்மகாநாட்டில் யாழ். மாநகராட்சிமன்ற ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம், உறுப்பினர்கள் திரு. ஆ துரைராசசிங்கம் திரு. யேசுதாசன் திரு. என். டி. செல்லத்துரை, திரு.எஸ் சண்முகராசா யாழ், பொலிஸ் தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரிதிரு. சிவசம்பு தவலிங்கம், சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த விழிப்புக்குழு உறுப்பினர்கள்சமூகப்பிரமுகர்கள் கூடி ஆலோசனை நடாத்தினுர்கள்.

கோஷ்டிக்கலவரத்தில் சம்பந்தப்பட்டபகுதியை சேர்ந்த விழிப்புக்குழு உறுப்பினர்கள் சமூகப் பிரமுகர்கள்கூடிஆலோசனை நடத்தினுர்கள்,

கோஷ்டிக்கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இம்மகாநாட்டில் உறுதிஅளித்ததுடன் சமாதானமாகச் சென்றனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானைப்பிள்ளை பரராசசிங்கம்

திருமதி தெய்வானைப்பிள்ளை பரராசசிங்கம் காலமானுர். இவர் காலம் சென்ற பரராசசிங்கத்தின் (சிறுப்பர், ஹற்றன் நாஷனல் வங்கி, கண்டி) அன்பு மனைவியும், பரராசசிங்கம் (கிறீன்லேஸ் வங்கி - கொழும்பு), காலம் சென்ற பரமேஸ்வரி, திருமதி ஞானேந்திரன் 'கொழும்பு பல்கலைக்கழகம் , திருமதி இராசபூபதி இராசதுரை, இராசசேகரம், ஜெயநாதன் (மருதானை பொலிஸ் ஸ்டேஷன்), புவனேஸ்வரி (ஆசிரியை, சென்மேரிஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்), A. C. பரராசசிங்கம் (சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிடெட்), விக்கினேஸ்வரன் இலங்கைக் கடற்படை காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாஜி, ஞானேந்திரன். இராசதுரை, ருக்மணி, மகாலட்சுமி, கமலா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னுரின் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக இன்று 27-ம் திகதி மாலை 4 மணிக்கு 17, கயிலாச பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

4002

## வான் மீது...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைவருக்குச் சொந்தமான வானே கடந்த சனிக்கிழமை குண்டுவீசி சேதப்படுத்தப்பட்டதாகும்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் 10 பேரும் இம் மாதம் 30ம் திகதி அடையாள அணிவகுப்பிற்குட்படுத்தப்படுவர்.

இதே வேளை குண்டுவீசி சேதப்படுத்தப்பட்ட வானும் இரசாயனப்பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுமென மன்னுர் பொலிசார் தெரிவித்தனர்.

## ஈழத் தமிழ்...

(1ம்பக்கத் தொடர்ச்சி

ஈழத்தில் தமிழ் நடாகத் துறைக்கு புதுவடிவம் கொடுத்தார். அமெச்சூர் நாடகத்துறைக்கு கட்டுப்பாடு. நெறியமைப்புகளை வகுத்துக் கொடுத்த பெருமைக்கு உரியவராவார். 1915ல் ஈழத்து தமிழ் நாடக உலகில் கட்டு பாடு, நெறியமைப்புகளை வைத்து முதல் நாடகத்தை மேடையேற்றிப் புதுமை செய்தார்.

"ஈழத்து தமிழ் நாடகமும் எனது அனுபவமும்" என்னும் இவரின் நூலுக்கு 1969ல் இலங்கை சாகித்திய மண்டலப்பரிசுகிடைத்தது.

1980ல் "நடகவித்தகர்" என்னும் கௌவரபட்டமளித்து யாழ். இலங்கைப் பல்கலைக்கழகம் கலையரசு அவர்களைப் பெருமைப்படுத்தியுள்ளது.

1980 செப்டம்பரில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியம் கலையரசுக்கு விழா எடுத்துக் கௌரவித்தது.

வட இலங்கை சங்கீத சபை அண்மையில் கொண்டாடிய தனது 50-வது ஆண்டு பொன் விழாவில் கலையரசு கௌரவிக்கப்பட்டார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் இன்று மாலை 4 மணிக்கு மானிப்பாய் திப்பிலி மயானத்தில் நடைபெறும்.

## புதிய தொழிற்சங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மலைநாடு போன்ற இடங்களுக்கும் விஸ்தரிப்பதுடன், நாடளாவிய நிலையில் தமிழ் பேசும் விசேஷ சேவை அலுவலர்களைக் கொண்ட பொதுவான தொழிற்சங்கம் ஒன்றை அமைக்க யாழ். மாவட்ட விஷேச சேவை அலுவலர்சங்க உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று திரு. ஆலாலசுந்தரம் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

## அறவழிப் போராட்டக்குழு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரியாலைசம்பவங்களையிட்டு அறவழிப் போராட்டக்குழு கவலை தெரிவித்துள்ளது.

அறவழிப்போராட்டக் குழுவின் செயற்குழு நேற்று நடந்தபோது அரியாலைச் சம்பவங்கள் பற்றி ஆராயப்பட்டது.

பிரச்னைகளை வன்முறையால் தீர்க்கமுடியாதென்றும், வன்முறையை இருபகுதியினரும் கைவிடவேண்டுமென்றும் அறவழிப்போராட்டக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க)

## அ.இ.விளையாட்டு அதிகாரிகள்சங்க உபதலைவர்

(வவனியா]

அகில இலங்கை விளையாட்டு அதிகாரிகள் சங்கத்தின் உபதலைவராக நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டு அதிகாரி திரு. கா நடராசா ஏகமனதாகத்தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் வவனியா, முல்லைத்தீவு, மன்னுர், யாழ்ப்பாண மாவட்டங்களின் மேற்படி சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகத் தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் கடமைபுரிந்துள்ளார். விளையாட்டு அமைச்சில் அண்மையில் நடைபெற்ற சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றது.

## சுந்தரர் குருபூசை

[காரைநகர்]

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனுர் வித்தியாலத்தில் நாளை புதன்கிழமை மாலை சுந்தரமூர்த்திநாயனுர் குருபூசையும், விழாவும் நடைபெறும்.

அதிபர் செ. தேவதாஸன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் தொழில் அதிபர் திரு. க. கனசராசா பிரதமவிருந்தினராக கலந்து கொள்கிருர்.

## முன்னுள் அமைச்சர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திருந்தார்'

பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தரப்பில் அளிக்கப்பட்டவிளக்கத்தைதொடர்ந்து பிரதிவாதிகளை ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

(ம-க)

## தமிழர் விடுதலைக்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மையாததும் அவசியமுமாகும்.

இந்த அதிகாரசபை இப்பொழுது இருக்கும் கூட்டணியின் தலைமைத்துவத்துக்கு சமமானதாக அமையும். கட்சியின் சகல நடவடிக்கைகளுக்கும் இந்த அதிகாரசபை இருக்கவேண்டும்

### இரகசிய வாக்கெடுப்பு

இந்த அதிகாரசபைக்கான உறுப்பினர்கள் கூட்டணியின் பொதுச்சபையிலிருந்து ரகசிய வாக்கெடுப்பின்மூலமே தெரிவு செய்யப்படவேண்டும்.

திரு எம்.சிவசிதம்பரம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

"இப்படியான ஒரு அதிகார சபை ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி சபை உருவாகும் பட்சத்தில் முழுமையான விசுவாசம் அதிகார சபை மேல் இருக்க வேண்டும். இல்லையேல் அது செயல்படமுடியாமல் போய்விடும்.

சபை வலுவுடையதாக இருக்குமோ இல்லையோ என்பது பற்றியும் சரியானமுறையில் ஆராயவேண்டும். அதன் பின்பே இதைப் பற்றித் தீர்மானிக்கவேண்டும்."

மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை ஆராய்ந்து த. வி. கூட்டணியின் பொதுச் சபையில் சமர்ப்பிக்க ஐவர் கொண்ட குழுவும் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது.

## ஜனசக்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாணம் வருகிறுர்.

இம்மாதம் 31-ந் திகதி பிற்பகல் 4 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இவரது சொற்பொழிவு இடம் பெறும்.

அன்றுகாலை தொழிலதிபர் எஸ். ரி. ஆர். இல்லத்தில் தேநீர் விருந்தும் கலந்துரையாடலும் இடம் பெறும்.

இத் தகவலை 'மல்லிகை' ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா தெரிவித்தார். [அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி, 68-ம். இலக்க அச்சகத்தில் 1982 ஜூ ஜூலை மீ 27-ம திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Tleegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.